# மேல்கோட்டை வைரமுடி சேவை
# (வைநதேயமுடி சேவை)



கோயில் எனப்படும் திருவரங்கமும், திருமலை என்கிற திருப்பதியும், பெருமாள் கோயில் எனப் போற்றப்பெறும் காஞ்சிபுரமும்,மேல்கோட்டை என அழைக்கப்படும் திருநாராயணபுரமும் வைணவச் சிறப்புடைய தலங்களாகும். இந்த வரிசையில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட முதல் மூன்று தலங்களுடன் திருநாராயணபுரமும்

சேர்த்து அழைக்கப்படும். காரணம், ஜகதாச்சார்யர் பகவத் ராமாநுஜர் விரும்பி சில காலங்கள் வாசம் செய்த தலம் மேல்கோட்டை. இத்தல மூலவரும், உற்சவ மூர்த்தியும் அவர் திருக்கரங்களினாலேயே பிரதிஷ்டை செய்யப்பட்ட சிறப்பை உடையது. இராமன் முடிசூட்டு விழாவைக் காண தசரதருக்குக் கிடைக்காத பேறு இராமானுசருக்கு கிடைத்தது. இத்திருத்தலத்தில் வைரமுடிசேவை பங்குனி மாதத்தில் புஷ்ய நட்சத்திரம் கூடிய நன்னாளில் மிக விமரிசையாக அனுஷ்டிக்கப்படுகிறது.இதைத் தவிர ராஜமுடி,(க்ருஷ்ண ராஜமுடி) சேவையும் கொண்டாடப் படுகிறது.

**மேல்கோட்டை**



புராணங்களில் மேல்கோட்டை,1. பத்மகூடா, 2.புஷ்கரா, 3. பத்மசேகரா, 4. அனந்த மாயா 5. யாதவகிரி 6. நாராயணாத்ரி 7.வேதாத்ரி, 8.வித்யா(ஞான) மண்டல் 9.தக்ஷிணபத்ரி என்று பல பெயர்களில் அழைக்கப் பட்டுள்ளது.

இத்தலம் இந்தியாவின் கர்நாடகம் மாநிலத்தில் அமைந்துள்ள மாண்டியா மாவட்டத்தில் பாண்டவபுரா தாலுக்காவில் இருக்கும் ஒரு அழகிய கிராமம் ஆகும். கர்நாடகத்தின் வைணவத்தலைமை பீடமாகக் கருதப்படும் இவ்வூருக்கு "திருநாராயணபுரம்" என்றும் பெயருண்டு.

பகவத் ராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்த காலத்தில், சோழமன்னன் ஒருவனால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை வந்த போது, சீடர்களின் விருப்பப்படி, திருநாராயணபுரத்திற்கு, நடைபயணம் மேற்கொண்ட போது, வழியில் துளசி செடிகள் அடர்ந்த புதரில், புற்றுக்குள் எம்பெருமானின் சிலா விக்ரகத் திருமேனி ஒன்று அடையாளங் காணப்பட்டு,ஹொய்சாலா அரசன் விஷ்ணுவர்த்தன் என்பவன் உதவியோடு நிர்மானம் செய்து, "திருநாராயணபுரம்" என அழைக்கும்படி அருளினார்

பெருமாள் தம் கருணையினால் அர்ச்சா ரூபமாக எழுந்தருளி, அருள் பாலிக்கும் நான்கு திருத்தலங்கள், தென்னிந்தியாவில் நாற்கோணமாக அமைந்துள்ளன. அவை

1. தெற்குதிசை - ஸ்ரீரங்கம் -ஸ்ரீரங்கநாதன்
2. கிழக்குதிசை - காஞ்சிபுரம் - ஸ்ரீ வரதராஜன்
3. வடதிசை - திருமலை - திருவேங்கடவன்
4. மேற்கு திசை - மேல்கோட்டை திருநாராயணபுரம்- திருநாராயணன்

இவ்வளவு சிறப்புப் பெற்ற இந்த திவ்யஸ்தலம் திருநாராயணபுரம், நான்கு யுகங்களும் ப்ரஸித்தி பெற்றது. க்ருத யுகத்தில், ஸநத் குமாரரால் நாராயணாத்ரி என்றும், த்ரேதா யுகத்தில், தத்தாத்ரேயரால் வேதாத்ரி என்றும் த்வாபர

யுகத்தில் ஸ்ரீ பலராமன் கிருஷ்ணரால் யாதவாத்ரி என்றும் வழங்கப்பட்டது. இக்கலியுகத்தில் யதிராஜரால் யதிஸ்தலமென்றும் வழங்கப்படுகிறது.

மேலும் ஸ்ரீரங்கத்தை - போக மண்டபமென்றும், திருமலையை புஷ்பமண்டபமென்றும் பெருமாள் கோயிலை - தியாக மண்டபமென்றும் திருநாராயணபுரத்தை - ஞான மண்டபமென்றும் பெரியோர்கள் கூறுவர்.

மேலும் "நடை அழகு" ஸ்ரீரங்கம் எம்பெருமானுக்கு ப்ரஸித்தம்.

திருவேங்கடமுடையான் அமுது செய்யும் ப்ரஸாதங்களில் “வடை” ப்ரஸித்தம். பெருமாள் கோயிலில் குடை அழகு. திருநாராயணனுக்கு “முடி”(கிரீடம்) அழகு.

இந்த ராமாநுஜரின் அபிமான ஸ்தலத்தில் இரண்டு திருக்கோவில்கள் மலைமேல், கோட்டையில் அமைந்துள்ளன. அவை நரசிம்மர் திருக்கோயில், இரண்டாவது நாராயணர் திருக்கோயில்.

நாராயணர் ஆலயத்தில் மூலவர்:- திருநாராயணன் / திருநாரணன் சங்க சக்ர,கதை, முதலியவைகளுடன் நின்ற திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம், திருவடியில் பீபீ நாச்சியார்.

தாயார் :- யதுகிரி நாச்சியார், மேலும் பூமி தேவி, வரநந்தினி நாச்சியார்.

உற்சவர் - ஸம்பத்குமாரர்,

இதரபெயர்கள் - ராம ப்ரியர், செல்லப் பிள்ளை, செல்வ நாராயணன்

தீர்த்தம் :- கல்யாணி தீர்த்தம், வேத புஷ்கரிணி, தனுஷ் கோடி தீர்த்தம் முதலிய எட்டு தீர்த்தங்கள்.

விமானம் - ஆனந்தமய விமானம்.

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இதர மூர்த்திகள் :
வண்புகழ் நாரணன் :- ஸ்நபனபேரர், (நாராயண பகவான் பக்கத்தில்) நித்ய திருமஞ்ஜனம் கண்டருளிகிறார்.
வாழ் புகழ் நாரணன், பலி செல்வர், செல்வப் பிள்ளை ஸந்நிதியில் ஸேவை ஸாதிக்கிறார்.
நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் செல்வ நாரணன், திருநாரணன். வண்புகழ்நாரணன், வாழ்புகழ்நாரணன் என்று நான்கு திருநாமங்களையும் அனுபவிக்கலாம்.

## செல்லப் பிள்ளை:




இத்தலத்தின் சிறப்பே செல்லப்பிள்ளை என்று அழைக்கப்படும் உற்சவமூர்த்தியால்தான்.
முன்பொரு காலத்தில் முகம்மதிய படையெடுப்பின் போது டில்லி சுல்தான் கோயிலை இடித்து

விக்ரகங்களையும், பொன் பொருள் எல்லாவற்றையும் கொள்ளையடித்துச் சென்றான் என்றும், திருநாராயணனின் உற்சவமூர்த்தியும் சுல்தானிடம் தான் இருக்கிறதென்றும் அவ்வூர் மக்கள் மூலம் அறிந்தார் இராமானுஜர். மன்னன் உதவியுடன் சில சீடர்களை உடன் அழைத்துக் கொண்டு டில்லி சுல்தானை நேரில் கண்டு உற்சவ மூர்த்தியைத் திரும்பத் தருமாறு கேட்டுக் கொண்டார். சுல்தானுக்கு இராமானுஜரைக் கண்டு வியப்பும் ஆச்சரியமும் ஏற்பட்டது. அவரைப் பற்றி முன்னரே கேள்விப்பட்டிருந்தான். தன் மகள் ஆசைப்பட்டாள் என்பதற்காக அந்த விக்ரகத்தை அவளுக்கு விளையாடக் கொடுத்திருந்தான். அதைத் திரும்பப் பெறுவதென்பது அவ்வளவு எளிதல்ல. அதனால் ஒரு நிபந்தனையுடன் அதை எடுத்துச் செல்லலாம என்றான். நிபந்தனை இதுதான். இராமானுஜர் உற்சவமூர்த்தியை அழைக்க வேண்டும. விக்ரகம் தானாகவே அவரிடம் வந்து சேரவேண்டும் என்றான். உடனே இராமானுஜர் ஒரு குழந்தையை அழைப்பதுபோல் ”என் செல்லப் பிள்ளாய் வருக” என்று அன்பாய் அழைத்தார். என்ன ஆச்சரியம்! சிலைவடிவில் இருந்த விக்ரகம் மாறி ஒரு குழந்தை வடிவில் நடந்து வந்து அவர் மடியில் அமர்ந்து கொண்டு மீண்டும் சிலையாயிற்று. சுல்தான் மலைத்துப் போனான். நிபந்தனைப்படியே உற்சவ மூர்த்தியை எடுத்துப்போக அனுமதித்து அத்துடன் பொன்னும் பொருளும் தந்து அனுப்பி வைத்தான். இதுவே இத்தலத்தில் உற்சவ மூர்த்தியாய் அலங்கரிக்கின்றது (கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்த கோவிந்தனின் இந்த செய்கை "யதிராஜ

சம்பத்குமார வைபவம்' என்ற பெயரில் உற்சவமாக உடையவரின் அவதாரத் தலமான ஸ்ரீபெரும்புதூரில் இன்றைக்கும் கொண்டாடப் படுகின்றது).
செல்லப்பிள்ளை, சம்பத்குமார், ராமப்பிரியர் என்று பெயர்கள் கொண்டு வாத்சல்யத்துடன் அழைக்கப்படும் இந்த விக்ரகத்தின் திருமேனி ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு பிரம்மாவினால் கொடுக்கப்பட்டு ஆராதனை செய்யப்பட்டது. அதன்பின் கிருஷ்ண பரமாத்மாவினாலும், பலராமனாலும் ஆராதிக்கப்பட்டதாக புராண வரலாறு தெரிவிக்கின்றது. சுல்தானின் மகள் சிலையைப் பிரிந்திருக்க முடியாமல் மேல்கோட்டையைத் தேடி ஓடி வந்து உற்சவமூர்த்தியை ஆரத் தழுவிக் கொண்டாள். அடுத்த நிமிடம் அந்த சிலையுடன் ஐக்கியமாகி விட்டாள். அவள் அன்பைப் பாராட்டி அவளைப் போலவே ஒரு சிலை செய்து "பீபீ நாச்சியார்" என்ற பெயரில் நாராயணனுக்கருகில் அமர்த்தி விட்டார் இராமானுஜர். பங்குனி மாதத்தில் நடைபெறும் வைரமுடிசேவை விழாவில் இவ்விருவரும் சேர்ந்தே வீதி உலா வரும் வழக்கம் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# வைரமுடி சேவை



ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி, திருமலை பிரம்மோற்சவம், காஞ்சிபுரம் கருடசேவை போல வைணவர்களால் பெரிதும் போற்றப்படும் மிகப்பெரிய திருவிழா "மேல்கோட்டை வைரமுடி சேவை"யாகும்.

மேல்கோட்டை நாராயணபுரத்தில் பங்குனி மாதத்தில் நடைபெறும் ‘வைரமுடி சேவை’ விழா தனிச்சிறப்புடையது. இராமானுஜர் சந்நிதிக்கு முன்னால் உற்சவ மூர்த்தியை,நாச்சியாருடன் எழுந்தருளச் செய்து வைரமுடி அணிவித்து, விழா கொண்டாடுகின்றனர்.

அன்றைய நாளில் கருடன் கொணர்ந்த வைரத்தாலான கிரீடம் செல்லப்பிள்ளைக்கு சாற்றப்பட்டு, தங்கத்தாலான கருடன் மீது மாடவீதிகளில் உபய நாச்சிமார்களுடன் எழுந்தருள

செய்யப்படுகிறது. வைரமுடியை பகலில் காண இயலாது என்ற நம்பிக்கையின்கண் இவ்வைரமுடி சேவை இப்போதும் இரவுப்பொழுதிலே தொடங்கி விடியும் முன் முடிக்கப்பட்டுவிடுகிறது. மேலும் வைரமுடி சாற்றும் போதும் பிரதான அர்ச்சகர் தன் கண்களை மெல்லிய துணியால் கட்டியப்பின்னரே வைரமுடியை அதற்குண்டான பெட்டியிலிருந்து வெளியில் எடுக்கிறார்.

ஒரு காலத்தில் பிரகலாதன் மகன் விரோசனன், பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த பெருமானின் கீரீடத்தை அபகரிக்க, பகவானின் ஆணைப்படி கருடாழ்வார் அதை மீட்டு துவாரகையை ஆண்ட கிருஷ்ணனின் தலையில் அணிவிக்க, அது பொருந்தவில்லை. அடுத்ததாக, திருநாராயணபுரத்தில் உள்ள ஶ்ரீராமப்பிரிய உற்சவ மூர்த்திக்கு அணிவிக்கப்பட்டதாம். என்ன ஆச்சரியம்! அந்த திருமேனியில் கனக்கச்சிதமாக பொருந்தியதாம். இந்த தகவலை கருட பகவான் பாற்கடல்நாதனிடம் சொல்ல, அவரும் அந்த கிரீடம் பூலோகத்திலேயே இருக்க அனுக்கிரகித்தாராம். கருடனுக்கு வைநதேயன் என்ற பெயர் உண்டு. அதனால் அவரால் சாற்றப்பட்ட கிரீடம் வைநதேய முடி என்று அழைக்கப்பட்டு, பின்னாளில் வைநமுடி என்று சுருங்கி,பின்னர் வைரமுடி என்று மருவி உள்ளது. இந்த வைரக்கிரீடம், மைசூர் அரண்மனை கருவூலகத்தில் பாதுகாப்பாக உள்ளது. நம்மாழ்வார் அருளிய திருவைமொழியில், (4-1) ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர் என்கிற பதிகம், பகவத் இராமானுசரின் நியமனத்தால், திருநாராயணபுரத்திற்கு அர்ப்பணிக்கப் பட்டது.